අනුකූලතා තක්සේරු පිළිබඳ ශ්‍රී ලංකා ප්‍රතීතන මණ්ඩලය

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

SRI LANKA ACCREDITATION BOARD FOR CONFORMITY ASSESSMENT

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

MINISTRY OF TRADE, COMMERCE, FOOD SECURITY AND CO-OPERATIVE DEVELOPMENT

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT
# 2024

# வருடாந்த அறிக்கை

# 2024

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான

## தராதர அங்கீகார சபை

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

அங்கத்துவம்

## உள்ளடக்க அட்டவணை


| | | பக்க இல |
|---|---|---|
| | தலைவரின் செய்தி | iv |
| | நிறைவேற்று அடிப்படையிலான தொகுப்பு | vi |
| 1. | அறிமுகம் | 1 |
| | 1.1. தரக் கொள்கை, பாரபட்சமற்ற கொள்கை, தொலைநோக்கு, செயல் நோக்கு மற்றும் பெறுமானங்கள் | 2 |
| | 1.2. இலக்குகள், நோக்கங்கள் மற்றும் உபாயத்திறன்கள் | 5 |
| 2. | நிர்வாக சபை | 8 |
| 3. | சட்டரீதியான குழுக்கள் | 9 |
| | 3.1. கணக்காய்வுக் குழு | 9 |
| 4. | செயற்பாடுகளின் முகாமைத்துவம் | 10 |
| | 4.1. மனித வளங்கள் | 10 |
| | 4.2 இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைப் பணிக்குழு | 10 |
| 5. | செயலாற்றுகை சிறப்பம்சங்கள் 2024 | 11 |
| | 5.1. தராதர அங்கீகார சேவைகள் | 11 |
| | 5.2. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 11 |
| | 5.3. சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பு | 11 |
| 6. | நிதிசார் தகவல் 2024 | 13 |
| | 6.1. நிதித்துறையின் முக்கிய அமிசங்கள் | 13 |
| | 6.2. 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | 14 |
| | 6.3. 2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று | 16 |
| | 6.4. நிகர சொத்துகள்/ பங்குகளில் மாற்றங்கள் பற்றிய கூற்று | 17 |
| | 6.5. 2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சற் கூற்று | 18 |
| | 6.6. நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 24 |
| இணைப்புகள் | | |
| | இணைப்பு **01**- நிறுவனக் கட்டமைப்பு | 42 |
| | இணைப்பு **02**- செயற்படுத்துகைக் கட்டமைப்பு | 43 |
| | இணைப்பு **03**-2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்குழு விபரங்கள் | 44 |
| | இணைப்பு **04**- பணியாளர் பயிற்சி 2024 | 46 |
| | இணைப்பு-**05**- 2024 இல் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 48 |

# தலைவரின் செய்தி



2024 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் (SLAB) வருடாந்த அறிக்கையை நிர்வாக சபையின் தலைவராக நான் மிகுந்த பெருமையுடனும் நன்றியறிதலுடனும் சமர்ப்பிக்கிறேன்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, இரண்டு தசாப்த கால அர்ப்பணிப்பு மிக்க சேவை மற்றும் நாட்டுக்கு ஆதரவு வழங்குவதில் சிறப்பு என்பவற்றைக் கொண்டாடுவதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி குறிப்பிடத்தக்கதொரு மைல்கல்லைக் குறிக்கிறது. 2025 ஜனவரி இல் நான் தலைவராகப் பொறுப்பேற்ற போதிலும், இலங்கையின் தேசிய தராதர அங்கீகார அதிகாரசபையாக அதன் வகிபாகத்தை வலுப்படுத்துவதற்கு 2024 இல் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அடைந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தராதர அங்கீகார செயன்முறைகளை ஒழுங்குபடுத்துதல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் அனைத்து பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு மூலோபாய முயற்சியான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணிப்பாய்வு முகாமை முறைமையின் முற்போக்கான வளர்ச்சியே இந்த வருடத்தின் முக்கிய சாதனைகளில் ஒன்றாகும். 2024 டிசம்பர் இல், இந்த முறைமை பதிலளிக்கக்கூடிய, நிகழ்நேர பங்குதாரர் ஈடுபாட்டிற்கும் அங்கீகார நடவடிக்கைகளில் அதிக செயல்திறனுக்கும் அடித்தளத்தை அமைத்தவாறு, ஒரு முழுமையான திட்டமாக செயல்பாட்டுக்கு வந்தது. 2025 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் சகல தராதர அங்கீகாரத் திட்டங்களிலும் இந்த முறைமையின் முழுமையான டிஜிட்டல்மயமாக்கலைக் காணும் எனவும், புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல் கொள்கையுடன் இணைந்த ஒரு முன்னோடி அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினை நிலைநிறுத்தும் எனவும் நான் நம்புகிறேன்.

2024 ஆம் ஆண்டு முழுவதும், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, சோதனை, அளவுத்திருத்தம், மருத்துவம், ஆய்வு மற்றும் GHG சரிபார்ப்பு மற்றும் எண்பிப்புத் திட்டங்களில் கணிசமான எண்ணிக்கையிலான புதிய தராதர அங்கீகாரங்கள் மற்றும் நோக்க நீடிப்புகளை வழங்கியது. தேசிய தேவைகள் மற்றும் சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப புதிய தராதர அங்கீகாரத் திட்டங்களையும் நாங்கள் அறிமுகப்படுத்திய அதே நேரத்தில் நிதி ஸ்திரத்தன்மையையும் பேணுகிறோம்.

இந்த சாதனைகள் யாவும் கூட்டு முயற்சியின் மூலம் சாத்தியமானது. எங்கள் வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான நம்பிக்கைக்காக ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கும், தேசிய தர

உட்கட்டமைப்பு முழுதுமான எங்கள் பங்குதாரர் நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் தராதர அங்கீகாரத் தீர்மானங்களின் நம்பகத்தன்மை மற்றும் உலகளாவிய நம்பகத்தன்மையை தொழில்முறை ரீதியாக உறுதி செய்யும் எங்கள் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் குழாமிற்கு சிறப்பு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அலுவலர்களின் வலுவான அர்ப்பணிப்புமிக்க சேவையையும் நான் பாராட்டுகிறேன். அவர்களின் பணி நெறிமுறை, நிபுணத்துவம் மற்றும் தகவமைப்புத் திறன் ஆகியவை எங்கள் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.

இறுதியாக, புதிய தலைவராக, முன்னாள் தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்களின் வழிகாட்டுதலும் மூலோபாய வழிநடத்தலும் சவால்களை கையாள்வதிலும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் இலக்குகளை அடைவதிலும் முக்கிய பங்குகளை வகித்தன. ஒத்தியல்பு மதிப்பீட்டில் நம்பிக்கை ஊடாக தேசிய தராதர நிலைகளை உயர்த்துதல், புத்தாக்கங்களை வளர்த்தல் மற்றும் இலங்கையின் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த உந்துசக்தியைத் தொடர்ந்து கட்டியெழுப்புவோம்.



**எயார் வைஸ் மார்சல் (ஓய்வுநிலை) பிரசன்ன ரணசிங்க**
தலைவர்
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நிர்வாக சபை

## பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியின் நிறைவேற்றுத் தொகுப்பு



2024 ஆம் ஆண்டாபனது, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைக்கு (SLAB) மற்றுமொரு உற்பத்தித்திறன் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாகும். ஆசிய பசிபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்பு (APAC) இனால் 2023 ஆம் ஆண்டில் அதன் சர்வதேச சக மதிப்பீட்டின் எய்துகையைக் கட்டியெழுப்ப, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, நாட்டின் ஒத்தியல்பு மதிப்பீட்டு உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் அதன் பணியில் உறுதியாக இருந்தது. தற்போது தேர்ச்சிச் சோதனை வழங்குநர்கள், ஆளணிசார் சான்றுப்படுத்தல் அமைப்புகள், சரிபார்த்தல் மற்றும் உறுதிப்படுத்தல் அமைப்புகள், எரிசக்தி முகாமை முறைமைகள் மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமை முறைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆசிய பசிபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்பினது பரஸ்பர அங்கீகார ஏற்பாட்டின் (MRA) விரிவாக்கப்பட்ட நோக்கெல்லையானது, பரந்த அளவில் பங்குதாரர்களுக்கு தொடர்ந்து பயனளித்து வருகிறது. இந்த அங்கீகாரங்கள் சகல தராதர அங்கீகாரம் பெற்ற சேவைகளிலும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சோதனை அறிக்கைகள், சான்றுப்படுத்தல்கள், ஆய்வு மற்றும் சரிபார்த்தல் அறிக்கைகளை வெளியிடுதற்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையை இயலச்செய்துள்ளன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, அதன் தராதர அங்கீகார சேவைகளை ஒன்சைட், ரிமோட் மற்றும் கலப்பின முறைகள் மூலம் தொடர்ந்து வழங்கி, அணுகல் மற்றும் தகவமைப்புத் தன்மையை உறுதி செய்தது. 2024 ஆம் ஆண்டில், 11 சோதனை ஆய்வுகூடங்கள், 02 அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள், 05 முறைமை சான்றுப்படுத்தல் அமைப்புகள், 03 தயாரிப்பு சான்றிதழ் அமைப்புகள், 03 மருத்துவ ஆய்வகங்கள், 04 ஆய்வு அமைப்புகள், 2 சரிபார்த்தல் மற்றும் உறுதிப்படுத்தல் அமைப்புகள் மற்றும் 01 தேர்ச்சிச் சோதனை வழங்குநர்கள் உள்ளிட்ட 31 புதிய ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு (CABs) இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வெற்றிகரமாக தராதர அங்கீகாரத்தை வழங்கியது. மேலும், ஏற்கனவே தராதர அங்கீகாரம் பெற்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு தமது திறன்களை விரிவுபடுத்தவும் வளர்ந்து வரும் துறைசார் தேவைகளை ஈடு செய்யவும் அனுமதிக்கும் வகையில் 16 நோக்க நீடிப்புகள் அங்கீகரிக்கப்பட்டன.

பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது, ஒரு முக்கிய மூலோபாய மையமாக தொடர்ந்து காணப்பட்டது. கைத்தொழில், ஒழுங்குமுறை நிறுவனங்கள் மற்றும் ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளின் பங்குதாரர்களுக்கு பயனளிக்கும் வகையில் அனைத்து முக்கிய தராதர அங்கீகாரத் திட்டங்களையும் உள்ளடக்கிய 22 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர

அங்கீகார சபை நடத்தியது. திறன் மேம்பாட்டு முயற்சிகள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் மதிப்பீட்டாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நீடிக்கப்பட்டன. தொழில்நுட்ப அறிவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுதமெ பொருட்டு, ஆசிய பசிபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்பு இனால் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்திய முன்னெடுப்புகளில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளை வினைத்திறனுடன் செயல்படுத்துவதற்காக தராதர அங்கீகாரம் பெற்ற ஒத்தியல்பு மதிப்பீட்டு சேவைகளைக் கைக்கொள்வதில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதன் மூலமும் ஆதரவு வழங்குவதன் மூலமும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, ஒழுங்குமுறை நிறுவனங்களுடன் அதன் ஈடுபாட்டை மேலும் விரிவுபடுத்தியது. இந்த ஆண்டில், தராதர அங்கீகாரம் ஊடாக ஒழுக்காற்று முறைமைகளை வலுப்படுத்தும் பொருட்டு தேசிய உரச் செயலகம், விவசாய அமைச்சு, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், தேசிய சேதன கட்டுப்பாட்டுப் பிரிவு (NOCU), ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB), நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை நெருக்கமாகப் பணியாற்றியது.

தேசிய பொருளாதார இலக்குகளுடன் இணைந்து, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, அந்நியச் செலாவணி உருவாக்கத்தை ஆதரிக்கும் வகையில் அதன் தராதர அங்கீகார சேவைகளை சர்வதேச ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு விரிவுபடுத்தியது. 2024 ஆம் ஆண்டில், சர்வதேச CAB களின் வருமானம், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நிதித் துறையில் கணிசமானளவில் பங்களித்தது, இது 72.86 மில்லியன் இலங்கை ரூபாவாக இருந்தது.

நிதி ரீதியாக, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூ.157.19 மில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயல்பட்டு, ரூ.162.08 மில்லியன் மொத்த வருமானத்தை ஈட்டியது. நிறுவனம் மீண்டெழும் செலவினத்திற்கு மேலாக 159.96% என்ற விகிதத்தை அடைந்தது.

2025 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, அதன் 20 ஆவது ஆண்டு நிறைவை நெருங்கும் வேளையில், தேசிய தர உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும், இலங்கை உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தை ஊக்குவிப்பதிலும் இரண்டு தசாப்தங்களாக அர்ப்பணிப்பு மிக்க சேவை புரிந்தமையை இந்த நிறுவனம் பெருமையுடன் பிரதிபலிக்கிறது. நம்பகமான தராதர அங்கீகார சேவைகள் மூலம் தேசிய அபிவிருத்திக்காக சிறப்பு, நம்பகத்தன்மை மற்றும் ஆதரவின் பொருட்டான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த மைல்கல் எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, புத்தாக்கம், திறன் மேம்பாடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு என்பவற்றிற்கான கடப்பாட்டினையும் அதன் சேவைகள் மிக உயர்ந்த தரத்தில் நிலைநிறுத்துவதையும் இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை உறுதி செய்தலையும் வருங்காலத்திலும் தொடர்கிறது



**சந்திதா எதிரிவீர**

**பதில் பணிப்பாளர்/ பிர.நிறை.அலுவலர்**

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**

# 1. அறிமுகம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB), 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் தேசிய தராதர அங்கீகார அதிகாரசபையாகும். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, வர்த்தகத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் இயங்குவதுடன் அச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது. அச்சபையின் உறுப்பினர்களில் ஒருவரை அமைச்சர் தலைவராக நியமிக்கிறார். அதன் பணிப்பாளர், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக உள்ளதுடன் நிர்வாகசபையின் செயலாளராகவும் உள்ளார்

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்பாடுகளில் ஒத்தியல்பு மதிப்பீடுகளை எளிதாக்குவதற்கு தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான தராதர அங்கீகார சேவைகளை வழங்குவதற்கும் சபை பொறுப்பாக உள்ளது. பிரதான தராதர அங்கீகார சேவைகளில், சோதனை/ மருத்துவம்/ அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள், முறை/ உற்பத்தி/ நபர்கள் சான்றுப்படுத்தல் அமைப்புகள், பரிசோதனை அமைப்புகள், GHG சான்று மற்றும் சரிபார்ப்பு அமைப்புகள், கைத்தொழில், வர்த்தக சமூகம், நுகர்வோருக்கு குறிப்பிட்ட சேவைகளை வழங்கும் தேர்ச்சி பெற்ற பரிசோதனை வழங்குநர்கள் மற்றும் சிறந்த ஆய்வுகூடப் பயிற்சி, நுகர்வோர் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவை அடங்கும். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் உறுதிப்படுத்தலுடன் 2005 செப்டம்பர் 23 ஆம் திகதி அதன் செயற்பாடுகளைத் தொடங்கியது. இது ஒரு தராதர அங்கீகார வழங்கல் நிறுவனமாக ISO/IEC 17011 (ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு தராதர அங்கீகாரம் வழங்கலுக்கான தேவைப்பாடுகள்) இற்கு இணக்கமாக இருப்பதுடன் சர்வதேச ஆய்வுகூடத் தராதர அங்கீகார கூட்டுறவுப் பரஸ்பர அங்கீகார ஏற்பாடு (ILAC MRA), சர்வதேச தராதர அங்கீகார மன்ற பலதரப்பு ஏற்பாடு (IAF MLA) மற்றும் ஆசிய பசிபிக் தராதர அங்கீகார ஒத்துழைப்பு பரஸ்பர அங்கீகார ஏற்பாடு (APAC MRA), ஆகியவற்றிற்கான அங்கீகாரத்துடன் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் வாடிக்கையாளர்களுக்கு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தராதர அங்கீகார சேவைகளை வழங்குகிறது.

## 1.1. தரக் கொள்கை, பாரபட்சமற்ற கொள்கை, தொலைநோக்கு, செயல் நோக்கு மற்றும் பெறுமானங்கள்

### தரக் கொள்கை

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, அதன் வாடிக்கையாளர்களுக்கு உயர் மட்ட ஒருமைப்பாடு, வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க தராதர அங்கீகார சேவைகளை வழங்கும் கடப்பாட்டைக் கொண்ட ஒரு சேவை நிறுவனமாகும்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, வாடிக்கையாளர்கள், பிற பங்குதாரர்கள் மற்றும் வணிகச் சூழலின் மாறிவரும் தேவைகளுக்கு பதிலளிக்கும் அதே வேளையில், ISO/IEC 17011,பிற தொடர்புடைய சர்வதேச தரநிலைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு ஏற்ப அங்கீகார சேவைகளை வழங்க உறுதி பூண்டுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, சர்வதேச அங்கீகாரத்தை மேம்படுத்துவதற்கும் அதன் எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் சர்வதேச அமைப்புகளின் பணிகளில் தீவிரமாகவும் திறம்படவும் பங்கேற்க உதவுகிறது.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது,, பணியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களுக்கு அவர்களின் திறன்களை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு ஒரு தளத்தை வழங்கும், இதனால் அவர்கள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் செயல்பாடுகளில் மிக உயர்ந்த தொழில்முறையில் பங்களிக்க முடியும்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, ஒரு நடைமுறையாக, அதன் செயற்பாட்டு செயலாற்றுகை மற்றும் ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் அங்கீகார சேவைகள் ஆகிய துறைகளில் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை தொடர்ந்து மீளாய்வு செய்து, மேம்பாட்டிற்காக பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்தும்

**பாரபட்சமற்ற கொள்கை**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிரதான நோக்கங்கள் 2005 ஆம் ஆண்டின் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்ட இல. 32 இன் கீழ் நிறுவப்பட்ட நோக்கத்திற்காக இலங்கை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதாகும். தராதர அங்கீகாரம் தொடர்பான ஒட்டுமொத்த கொள்கைகளும் உத்திகளும் பாரபட்சமின்றி நிறுவப்பட்டுள்ளன. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நிர்வாக சபையின் கீழ், கொள்கை மற்றும் மூலோபாயத்தை உருவாக்கும் செயல்பாட்டில் அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புக்கான சாத்தியம் உறுதி செய்யப்பட்டு, பாரபட்சமற்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது.
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணியாளர்கள் மற்றும் குழுக்கள் பாரபட்சமற்ற தன்மையை சமரசம் செய்யக்கூடிய மற்றும் ஏதேனும் சாத்தியமான முரண்பாடுகளை வெளிப்படுத்தக்கூடிய எந்தவொரு தேவையற்ற வணிக, நிதி மற்றும் பிற அழுத்தங்களிலிருந்தும் விடுபட்டு, அவர்களின் செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளை புறநிலையாகச் செயற்படலும் உறுதி செய்யப்படுகிறது. தராதர அங்கீகாரம் தொடர்பான முடிவுகள் திறமையான பணியாளர்கள் அல்லது மதிப்பீடுகளை மேற்கொள்பவர்களிடமிருந்து வேறுபட்ட குழுக்களால் எடுக்கப்படுகின்றன.
தராதர அங்கீகாரம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைத் தவிர, தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பிக்க விரும்பும் நிறுவனங்களுக்கு இலங்கையின் தேசிய தராதர அங்கீகார அதிகாரசபை என்ற வகையில் எடுக்கக்கூடிய தீர்மானங்களைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் தொடர்பில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆலோசனைப் பணிகளை மேற்கொள்ளாது..

## தொலைநோக்கு

தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக நல்வாழ்வுக்கு பங்களிக்கும் வகையில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற, ஆற்றல்மிக்க மற்றும் புத்தாக்கமான தராதர அங்கீகார அமைப்பாகத் திகழுதல்

## செயல் நோக்கு

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் ஒத்தியல்பு மதிப்பீடுகளை வசதிப்படுத்துவதற்கு சர்வதேச அங்கீகாரத்துடனான தராதர அங்கீகார சேவைகளை ஊக்குவித்தலும் வழங்கலும்.

## பெறுமானங்கள்

**S**நேர்மையுடனும் உச்சகட்ட நீதி வழிகாட்டுதலுடனும் சேவையாற்றுதல்

**L**தொடர்ச்சியாக கற்றறிதல்

**A**பங்குதாரர் தேவைகளை நம்பகமான முறையில் வழங்குதற்கு ஒரு குழாமாகச் செயற்படுதல்

**B**சுயாதீனமாகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் செயற்படுதல்

## 1.2 இலக்குகள், நோக்கங்கள் மற்றும் உபாயத்திறன்கள்

| | உந்துதல் பகுதி | இலக்குகள்/ நோக்கங்கள் | உபாயத்திறன்கள் | முக்கிய குறிகாட்டிகள் |
|---|---|---|---|---|
| 1. | பல்வேறு பங்குதாரர்களிடையே தராதர அங்கீகாரத்தை ஊக்குவித்தல் | 1. அங்கீகாரம் மற்றும் அதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை பங்குதாரரிடையே உருவாக்குதல் | 1. கொள்கை ஆக்கவியலாளருடன் நேரடியான கூட்டங்கள்<br>2. பயிற்சிப்பட்டறைகள்/ வெபினர்கள்<br>3. வெகுசன ஊடகம்/ இணையத்தளம்/ சமூக ஊடகப் பயன்பாடு | 1. விழிப்புணர்வை ஏற்படுத்திய நிறுவனங்கள்/ மக்களின் எண்ணிக்கை<br>2. புதிய அங்கீகாரத் திட்டங்கள் பற்றி அறிவிக்கப்பட்ட கைத்தொழில்கள்/ சி.ஏ.பி.களின் எண்ணிக்கை |
| | | 2. NQI க்குள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான அங்கீகார சபையின் நிலைப்படுத்தல் | 1. முன்மொழியப்பட்ட தேசிய தர சபையின்(NQC)கீழ் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினதும் பிற NQI நிறுவனங்களையும் நிலைநிறுத்துவதில் பரப்புரை செய்தல் | |
| | | 3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் தரத்தன்மை | 1 நாட்டிற்குள்ளேயும் வெளியேயும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் வர்த்தக நாமத்தை ஊக்குவித்தல் | 1. வர்த்தக குறியீட்டுச் செயற்பாடுகளின் எண்ணிக்கை |
| 2. | பாரபட்சமற்ற தன்மையை உறுதிப்படுத்தி தராதர அங்கீகாரத்தை விரிவுபடுத்தல் | 1. தற்போதைய தராதர அங்கீகாரத் திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்<br>2. தற்போதைய வாடிக்கையாளரில் நோக்க எண்ணிக்கையை அதிகரித்தல்<br>3. புதிய அங்கீகாரத் திட்டங்களை அறிமுகப்படுத்தல். | 1.சந்தை நுண்ணறிவு & பரிந்துரை வலையமைப்பை விருத்தி செய்தல்<br>2.சந்தை ஊக்குவிப்பு<br>3. தேசிய/ சர்வதேச திட்ட உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் | 1. வாடிக்கையாளர் எண்ணிக்கையின் சதவீத அதிகரிப்பு<br>2. நோக்கெல்லை நீடிப்புகளின் எண்ணிக்கை<br>3.அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தராதர அங்கீகாரத் திட்டங்களின் எண்ணிக்கை |
| 3. | தராதர அங்கீகாரத்தில் ஒழுங்குபடுத்துனர்களின் முனைப்பான ஈடுபாடு | 1.ஒழுங்குபடுத்துனர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒத்தியல்பு மதிப்பீடு பயன்பாட்டை மேமபடுத்தல்<br>2. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சேவைகளின் பொருட்டு அவர்களின் ஒழுங்குபடுத்தலில் உள்ள சபை அங்கீகார சேவைகளுக்கு ஒழுங்குபடுத்துனர்களை ஊக்குவித்தல் | 1. தனிப்பட்ட முறையில், ஒழுங்குபடுத்துனர்களுக்கான உணர்திறன் திட்டங்கள்<br>2. SLAB இன் முடிவெடுக்கும் குழுக்களில் கட்டுப்பாட்டாளர்களின் பிரதிநிதித்துவம்<br>3. மேப்பிங் மற்றும் ஒழுங்குபடுத்துபவர்களை அவர்களின் ஒழுங்குமுறைகளுக்குத் தொடர்புடைய சாத்தியமான அங்கீகாரத் திட்டங்களுடன் சீரமைத்தல்<br>4.ஒழுங்குபடுத்துனர் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1.1.SLAB வலையமைப்பில் உள்ள ஒழுங்குபடுத்துனர்களின் எண்ணிக்கை<br>2. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு உறுதியான ஒழுங்குபடுத்துனர்களின் எண்ணிக்கை<br>3. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைக் குறிப்பிடும் வகையில் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் எண்ணிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் சாதகமான பணிச்சூழலில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் நிறுவன திறனை வலுப்படுத்துதல் | 1. தராதர அங்கீகாரத்தின் விரிவாக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவனத்தின் தொழில்நுட்ப திறனை விரிவுபடுத்துதல் | 1. தற்போதுள்ள மனித வளங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய பணியாளர்களைப் பெறுதல்<br><br>2. பொருத்தமான தொழில்நுட்பம், சட்ட, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேம்பாடுகளுடன் ஸ்மார்ட் நிறுவன அமைப்பை உருவாக்குதல் | 1. புதிய போட்டுத்திறன்கள் சேர்க்கப்படல்<br>2. புதிய தொழில்நுட்ப, சட்ட மற்றும் சமூக மேம்பாடுகள் செய்யப்படல் |
| | | 2. சாதகமான பணிச்சூழலை உருவாக்குதல் மற்றும் பணியாளர் நலன் திட்டங்களை உருவாக்குதல் | | |
| 5. | நிதி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்தல் | 1. SLAB **ஐ நிதி ரீதியாக நிலையானதாகவும் நிலையானதாகவும் ஆக்குதல்** | 1. தற்போதைய தராதர அங்கீகார திட்டங்களில் வாடிக்கையாளர் தளத்தை அதிகரித்தல்<br>2. சந்தை தேவையின் அடிப்படையில் புதிய அங்கீகார திட்டங்களை அறிமுகப்படுத்துதல்<br>3.பயிற்சி திட்டங்களை ஊக்குவித்தல்<br>4. SLAB இன் கட்டளையின் வரம்பிற்குள் புதிய வருமானம் ஈட்டும் முயற்சிகளை அடையாளம் காணுதல் | 1. தற்போதைய அங்கீகார திட்டங்கள் மூலம் வருமானத்தில் சதவீத அதிகரிப்பு<br>2. பயிற்சி திட்டங்கள் மூலம் வருமானத்தில் சதவீத அதிகரிப்பு |
| | | 2. **சிறந்த சுற்றுச்சூழல் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்** | 1.ஆற்றல் திறன் மேம்பாடு<br>2.காலநிலை நட்பு முயற்சிகள்<br>3. பொருள் பயன்பாட்டு திறன்<br>4. பச்சைவாயு அறிக்கை | 1. ஆற்றல் பயன்பாட்டின் சதவீத குறைவு<br>2. நிலையான பயன்பாட்டின் சதவீத குறைவு<br>3 GHG உமிழ்வின் சதவீத குறைவு |
| 6. | செயல்பாடுகளின் நிலைத்தன்மையின் மூலம் தராதர அங்கீகாரத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் | 1. SLAB **அங்கீகாரம் பெற்ற** CAB **களால் வழங்கப்பட்ட இணக்க மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தை உறுதி செய்தல்** | 1. SLAB அங்கீகாரத்தை ஊக்குவிப்பதில் தற்போதைய சிக்கல்கள், புதிய தேவைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை அடையாளம் காண தொடர்புடைய நிறுவனங்களுடன் (EDB, வர்த்தகத் துறை, ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள், அங்கீகாரம் பெற்ற CABகள், உறுப்பினர் ABக்கள்) நெட்வொர்க்கிங்.<br><br>2. சர்வதேச அங்கீகார நிறுவனங்களின் தொடர்புடைய மன்றங்களில் பிரதிநிதித்துவம் செய்தல், சக மதிப்பீடுகள், பயிற்சிகள் மற்றும் SLAB அங்கீகாரத்தை மேம்படுத்துதல்.<br><br>3. SLAB இன் தற்போதைய சர்வதேச அங்கீகார நிலையை மேம்படுத்தல். | 1. SLAB தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்/அறிக்கைகளில் உள்ள சிக்கல்களின் எண்ணிக்கை<br>2. புதிய எம்எல்ஏ/எம்ஆர்ஏகளுக்கான விண்ணப்பங்கள்<br>3. புதிய எம்ஆர்ஏ/எம்எல்ஏ அங்கீகாரம் கிடைத்தல்.<br><br>4. கலந்துகொண்ட கூட்டங்கள்/மன்றங்களின் எண்ணிக்கை |
| | | 2. பிராந்திய மற்றும் உலக அளவில் தராதர அங்கீகார மேம்பாடுகளுக்கு பங்களித்தல் | 1 சக மதிப்பீட்டில் பங்கேற்றல்<br>2. கூட்டங்களில்/குழுக்களில் பங்கேற்றல்<br>3. பயிற்சித் திட்டங்களின் வளவாளராகப் பங்களித்தல் | 1. பங்குபற்றிய ஒத்த மதிப்பீடுகள், கூட்டங்கள், குழுக்களின் எண்ணிக்கை |

## 1.3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின்பணிகள்

- தேசிய, சர்வதேச தரங்களுக்கமைவாக CABகளின் தராதர அங்கீகாரத்தை மேற்கொள்ளல்.
    - ➢ ஆய்வுகூடங்களைப் பரிசோதித்தல் *(ISO/IEC 17025)*
    - ➢ அளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வுகூடங்கள் *(ISO/IEC 17025)*
    - ➢ மருத்துவ ஆய்வுகூடங்கள் *(ISO 15189)*
    - ➢ முறைமைகளுக்கு சான்றுப்படுத்தும் அமைப்பு *(ISO/IEC 17021)*
    - ➢ உற்பத்திகளுக்கு சான்றுப்படுத்தும் அமைப்பு *(ISO/IEC 17065)*
    - ➢ ஆட்களுக்கு சான்றுப்படுத்தும் அமைப்பு *(ISO/IEC 17024)*
    - ➢ சான்றுப்படுத்தல்/ சரிபார்த்தல் அமைப்புகள் *(ISO/IEC 17029)*
    - ➢ பரிசீலனை அமைப்புகள்*(ISO/IEC 17020)*
    - ➢ தேர்ச்சிச் சோதனை வழங்குனர்*(ISO/IEC 17043);* மற்றும்
    - ➢ சிறந்த ஆய்வுகூட நடைமுறை (GLP).

- தேசிய தராதரக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்க தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- மதிப்பீட்டாளர் பயிற்சி நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு நடத்துதல்
- ஒத்தியல்பு மதிப்பீடு தொடர்பில் ஒத்துழைப்பு மற்றும் தொடர்புக்கான தேசிய மன்றமாகச் செயற்படுதல்.
- தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல் மூலம் தராதர அங்கீகார நடைமுறைகள் மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகளில் திறமையை நிறுவுதல்.
- தராதர அங்கீகாரத்திற்கான தேசிய அமைப்புகளை ஆதரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- ஒத்த வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் பரஸ்பர தராதர அங்கீகாரம் தொடர்பான ஒப்பந்தங்களை முடித்தல்.
- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீட்டித்தல், குறைத்தல், இடைநிறுத்துதல் அல்லது திரும்பப் பெறுதல் ஆகியவற்றின் நோக்கத்திற்காக இணக்கம் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல் மற்றும் நடத்துதல்.

## 2. நிர்வாக சபை

சபையின் அதிகாரங்களும் பணிகளும் 2005 ஆம் ஆண்டின் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்ட இல. 32 இன் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட பதின்மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக சபை தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக ஒவ்வொரு மாதமும் கூடுகிறது.

2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, நிர்வாக சபையின் சபைக்கட்டமைப்பு பின்வருமாறு.

கலாநிதி. சம்பத் வஹல - தலைவர்
சிரேஸ்ட விரிவுரையாளர், முகாமைத்துவக் கற்கைகள் பீடம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், இலங்கை.

திருமதி.ஜே.கே.என்.சமன்மலி - உறுப்பினர்
பணிப்பாளர், வர்த்தக, முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

திருமதி.சித்திகா சேனாரத்ன - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்,
இலங்கைத் தரக்கட்டளை நிறுவனம்

திரு.எஸ்.என்.அகுரந்திலக - உறுப்பினர்
பணிப்பாளர், அளவீட்டலகுகள், தரநிலை மற்றும் சேவைகள் திணைக்களம்

திரு.எம்.பி.என்.எம்.விக்ரமசிங்ஹ - உறுப்பினர்
மேலதிகச் செயலாளர்
தொழில்நுட்பவியல் அமைச்சு

திரு.ஐவர் லெனிஸ் குலதுங்க ரத்னாயக்க - உறுப்பினர்
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

பேரா.எம்.பி.பி.தர்மதாச - உறுப்பினர்
பீடாதிபதி, முகாமை மற்றும் நிதியியற் பீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்

திருமதி.வி.பி.கே.பிலபிட்டிய - உறுப்பினர்
மேலதிகச் செயலாளர்,
வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

திரு.எஸ்.ஏ.மகிந்த லால் குணதிலக - உறுப்பினர்
மேலதிகச் செயலாளர், கைத்தொழில் அமைச்சு

திருமதி. வத்சலா பிரியதர்சினி - உறுப்பினர்
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)-I
சுகாதார அமைச்சு,

# 3. சட்டரீதியான குழுக்கள்

## 3.1. கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது நிர்வாக சபையிலிருந்து 3 நிறைவேற்றுத்தரமல்லாத உறுப்பினர்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி, குழுவின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுத்தர அதிகாரியின் செயலாளர் ஆகியோரைக் கொண்டுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அழைப்பாளராகவும் ஏற்பாட்டாளராகவும் செயல்படுகின்றனர். நிர்வாக சபையின் திறைசேரிப் பிரதிநிதி குழுவின் தலைவராகச் செயற்படுகின்றார்.

குழுவின் முக்கிய பணியானது, நிர்வாக சபைக்கு ஒரு பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டை பராமரிக்கும் பொருட்டும் அதன் வெளியக நிதி அறிக்கை கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டும் அதன் பொறுப்புகளை கூட்டத்தில் நிறைவேற்ற உதவுவதாகும். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கை அளிக்கின்ற ஒரு சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வுச் செயல்பாட்டைக் கொண்டுள்ளது. வெளியகக் கணக்காய்வு செயற்பாடுகளின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கும், சபைக்கு பரிந்துரைகளை செய்வதற்கும் குழு பொறுப்புடையதாகும்.

குழுவானது இவ்வருடத்தில் 04 கூட்டங்களை நடத்தியதுடன் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பித்த அனைத்து அறிக்கைகளையும் மீளாவு செய்வதோடு சகல கணக்காய்வுக் குழு கூட்டங்களின் பிரமாணக் குறிப்புகளும் நிர்வாக சபையின் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| திருமதி ஜே.கே.என் சமன்மலி | தலைவர்/ சபை உறுப்பினர் | பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் |
| திரு.எம்.பி.என்.எம்.விக்ரமசிங்ஹ | உறுப்பினர்/ சபை உறுப்பினர் | விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினைப் பிரதிநிதிப்படுத்தி |
| திருமதி.வி.பி.கே.பிலபிட்டிய | உறுப்பினர்/ சபை உறுப்பினர் | வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு |
| திருவதி. சுரங்கி ராஜபக்ச | அவதானிப்பாளர் | பிரதம உள்ளக கணக்காய்வாளர், வர்த்தக அமைச்சு |
| திருமதி. சந்துனிமா பெரேரா | அவதானிப்பாளர் | கணக்காய்வாளர் நாயகத்தைப் பிரதிநிதிப்படுத்தி |
| திரு.ஆர்.ஆர்.கே.நுகபிட்டிய | அவதானிப்பாளர் | நிரல் அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| திருமதி சந்திரிகா திலகரத்ன | செயலாளர் | பணிப்பாளர்/ பிரதம நிறை.அதிகாரி, SLAB |
| திருமதி.ஹர்ஷா சந்திரசிறி | அழைப்பாளர் | உதவிப் பணிப்பாளர் (நிதி & நிர்வாகம்) SLAB |
| திருமதி ரி. வணிகசுந்தர | ஏற்பாட்டாளர் | உள்ளகக் கணக்காய்வாளர், SLAB |

# 4. செயற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் முகாமைத்துவச் செயற்பாடுகள் பணிப்பாளர்/ பிர. நிறை. அதிகாரி பதவிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள நிறுவன கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு, தொழில்நுட்ப, நிதி மற்றும் நிர்வாக பணியாளர்களின் ஒத்துழைப்புடன் சபையின் சகல நிறைவேற்றுப் பணிகளையும் மேற்கொள்வதற்கு பணிப்பாளர் பொறுப்புடையவராவார்.

## 4.1. மனித வளங்கள்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் மனித வளமானது குறைந்த எண்ணிக்கையிலான உள்ளக பணியாளர்களையும் கல்வியியலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்முறை அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பெரியளவிலான மதிப்பீட்டாளர் குழுவையும் கொண்டுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளின் திறனை உறுதிப்படுத்துகிறது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணியாளர்களின் நிதிப்புரள்வு முந்தைய ஆண்டுகளில் அதன் செயல்பாடுகளை கடுமையாகப் பாதித்தது எனினும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணியாளர்களின் உதவியுடன், ஏனைய வெளிநாட்டு அங்கீகார அமைப்புகளுக்கு இணையாக அதன் தராதர அங்கீகார அமைப்புகளைப் பேண முடிந்தது. சாதாரணமாக, ஒரு புதிய அதிகாரி, சுயாதீனமாக பணிபுரிய நியமிக்கப்படுவதற்கு முன், சம்பந்தப்பட்ட துறையில் திறமையானவராக இருக்க குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் தேவைப்படுகிறது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் விபரங்கள் இணைப்பு 04 இல் தரப்பட்டுள்ளன.

## 4.2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணிக்குழு



# 5. செயலாற்றுகைச் சிறப்பமிசங்கள் 2024

2024 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் 19 வருட கால நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தது. பரிசோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், சான்றுப்படுத்தல் அமைப்புகள் மற்றும் ஆய்வு அமைப்புகளுக்கு தொடர்புடைய சர்வதேச தரங்களின் அடிப்படையில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தனது சேவைகளை தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தத் தராதர அங்கீகாரத் திட்டங்கள், சர்வதேசக் கோட்பாடுகள் மற்றும் தராதர அங்கீகார அமைப்புகளுக்கு ஏற்புடைய ISO/IEC 17011 ஆகியவற்றுக்கு இணங்க நிர்வகிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன

## 5.1. தராதர அங்கீகார சேவைகள்

2024 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, கீழே குறிப்பிட்டவாறு, ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகளுக்கு தராதர அங்கீகாரத்தை வழங்கியது.

| அங்கீகாரத் திட்டம் | Progress |
|---|---|
| சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வுகூடங்கள் | புதிய -11, நோக்க நீடிப்புகள் -08 |
| | புதிய -02, நோக்க நீடிப்புகள் -08 |
| முறைமை சான்றுப்படுத்தல் | புதிய -05 |
| சான்றுப்படுத்தல் அமைப்புகள் - உற்பத்தி | புதிய -03 |
| **ஆய்வு அமைப்புகள்** | புதிய -04 |
| மருத்துவ ஆய்வுகூடங்கள் | புதிய -03 |
| **உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்த்தல் அமைப்புகள்** | புதிய -02 |
| தேர்ச்சிச் சோதனை | புதிய -01 |

## 5.2. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2024 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, பல்வேறு தராதர அங்கீகாரத் திட்டங்களை உள்ளடக்கி 22 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன், இதில் வெவ்வேறு ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புகள் மற்றும் கைத்தொழில்களிலிருந்தான 529 பங்களிப்பாளர்களைப் பயிற்றுவித்தது. 2024 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் இணைப்பு 05 இல் தரப்பட்டுள்ளது.

## 5.3. சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பு

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் அங்கீகாரத் திட்டங்களிற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணும்வகையில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைக்கு, உறுப்பு அமைப்பாக, சர்வதேச அங்கீகார நிறுவனங்களின் இடைக்கால மற்றும் வருடாந்த கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளில் பங்கேற்கவும் பங்களிக்கவும் ஒரு கடப்பாடு உள்ளது.

அதன்படி, **202**4 ஆம் ஆண்டின் போது இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது IAF மற்றும் ILAC இடைக்கால(மெய்நிகர்கூட்டங்களாக) மற்றும் IAF மற்றும் ILAC இன் இரு வருடாந்த கூட்டுக் கூட்டங்களிலும் பங்கேற்றுள்ளது

- திருமதி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி, திருமதி. சந்திதா எதிரிவீர, பிரதிப் பணிப்பாளர் (தராதர அங்கீகாரம்) மற்றும் திருமதி. மனிஷா விக்கிரமசிங்க, பிரதிப் பணிப்பாளர் (தராதர அங்கீகாரம்) ஆகியோர் 2024 ஏப்ரலில் நிகழ்நிலையில் நடைபெற்ற இடைக்காலக் கூட்டங்களில் பங்குபற்றினர்.
- திருமதி. சந்திதா எதிரிவீர, பணிப்பாளர்/ CEO (கடமை மேவுகை) 2024 செப்ரெம்பரில் இடம்பெற்ற **ILAC** மற்றும் **IAF** இன் கூட்டு வருடாந்தக் கூட்டங்களில் பங்குபற்றினார்

திருமதி சந்திரிகா திலகரத்ன மற்றும் திருமதி. சந்திதா எதிரிவீர ஆகியோர் உத்தியோகபூர்வ மற்றும் மாற்றீட்டுப் பிரதிநிதிகளாக முறையே **ILAC** மற்றும் **IAF** இன் வாக்கெடுப்பு நடைமுறையில் பங்கேற்றனர்.

மேற்படி பங்களிப்புகளுக்கு மேலதிகமாக, சக மதிப்பீடுகளில் பங்குபற்றும் பொருட்டு பல இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் அலுவலர்கள் **APAC** ஆல் நியமிக்கப்பட்டனர்.

- திருமதி. சந்திதா எதிரிவீர மற்றும் திருமதி. மனிஷா விக்கிரமசிங்க ஆகியோர் தலைமை சக மதிப்பீட்டாளர்களாக பணியாற்றினர்.
- திருமதி.மிதிலா குணசேகர சக மதிப்பீட்டாளராக பணியாற்றினார்
- திருமதி. நட்டாசா ஜயமான்ன மற்றும் திருவதி. புண்யா லியனகே மாகாண சக மதிப்பீட்டாளர்களாக பணியாற்றினர்.

இந்த பங்களிப்புகள் SLAB இன் உறுப்புரிமைக் கடப்பாடுகளை மாத்திரமன்றி உலகளாவிய தராதர அங்கீகார சமூகத்தில் அதன் தீவிர ஈடுபாட்டையும் மீள வலுப்படுத்துகின்றன.

# 6. நிதியியல் தகவல்கள் 2024

## 6.1. நிதியியல் சிறப்பமிசங்கள்

மீண்டெழும் செலவினத்திற்கான வருடாந்த ஒதுக்கீடு ரூ. 93.21 மில்லியனாகும். மீண்டெழும் அல்லது மூலதனச் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்புகள் எதுவும் இல்லை. உண்மையான மீண்டெழும் செலவினம் திறைசேரிப் பங்களிப்பு ரூ.21.18 அடங்கலாக ரூ. 101.32 மில்லியன் ஆகவிருந்தது.

மீளாய்வு வருடத்தில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, பிரதானமாக, அங்கீகாரச் சேவைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான அதன் செயற்பாடுகளிலிருந்து ரூ. 162.08 மில்லியனை வருமானமாக ஈட்டியது. மீண்டெழும் செலவினத்தைத் தாண்டிய வருமானம் 159.96%ஆகும்

மொத்த மூலதனச் செலவினம் ரூ. 3.44 மில்லியன் ஆகவிருந்ததுடன், சகல செலவினங்களும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வருவாயிலிருந்து ஈடு செய்யப்பட்டன

| வருடம் | மீண்டெழும் செலவினம் (ரூபா மில்லியன்) | | | | மூலதனச் செலவினம் (ரூபா மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வரவு செலவுத்திட்ட செலவு | உண்மைச் செலவினம் | திறைசேரி மானியங்கள் | ஈட்டுதல்கள் | வரவு செலவுத்திட்ட செலவு | உண்மைச் செலவினம் | திறைசேரி மானியங்கள் |
| 2007 | 14.70 | 11.50 | 8.23 | 2.83 | 1.50 | 1.40 | 1.50 |
| 2008 | 17.29 | 13.98 | 10.56 | 3.27 | 2.74 | 0.41 | 0.50 |
| 2009 | 19.60 | 15.01 | 11.47 | 3.32 | 2.33 | 0.44 | 0.66 |
| 2010 | 21.81 | 15.51 | 8.91 | 5.30 | 3.57 | 0.63 | 0.50 |
| 2011 | 23.30 | 21.33 | 13.28 | 8.12 | 3.08 | 0.63 | 0.80 |
| 2012 | 28.18 | 29.29 | 15.50 | 12.9 | 1.82 | 1.75 | 1.37 |
| 2013 | 33.00 | 36.61 | 14.80 | 18.08 | 2.00 | 1.51 | 1.50 |
| 2014 | 38.00 | 42.85 | 16.09 | 27.58 | 2.00 | 1.71 | 1.73 |
| 2015 | 64.50 | 63.14 | 12.20 | 55.24 | 3.00 | 1.64 | 1.25 |
| 2016 | 56.00 | 49.43 | 15.70 | 31.74 | 5.20 | 4.67 | 2.00 |
| 2017 | 60.5 | 57.91 | 16.16 | 36.03 | 2.00 | 2.05 | 0.91 |
| 2018 | 66.0 | 59.79 | 17.06 | 45.23 | 4.25 | 3.64 | - |
| 2019 | 71.8 | 66.67 | 19.49 | 47.43 | 6.92 | 2.43 | 1.4 |
| 2020 | 72.70 | 51.50 | 19.64 | 37.08 | 3.69 | 1.97 | 0.5 |
| 2021 | 75.87 | 54.31 | 17.68 | 49.35 | 3.80 | 2.62 | - |
| 2022 | 79.95 | 60.29 | 19.35 | 66.96 | 6.65 | 0.17 | - |
| 2023 | 87.61 | 81.12 | - | 157.19 | 9.00 | 1.96 | - |
| 2024 | 93.21 | 101.32 | - | 162.08 | 3.52 | 3.44 | - |

## 6.2. 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

### இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

### 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்புகள் | உண்மை 2024 | உண்மை 2023 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | ரூ. | ரூ. |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | **19** | 67,485,583.88 | 129,192,881.62 |
| முற்பணம் | **27** | - | 949,267.50 |
| பெறுகைகள் | **11** | 67,353,597.67 | 13,556,235.22 |
| முத்திரைகள் | | 15,000.00 | 15,000.00 |
| காகிதாதி இருப்புகள் | | 261,757.70 | 330,426.55 |
| முற்கொடுப்பனவுகள் | **17** | 651,616.16 | 492,780.01 |
| VAT கட்டுப்பாடு | | 175,959.01 | 175,959.01 |
| இடர்காலக் கடன்கள் | **16** | 1,177,000.00 | 1,135,800.00 |
| மீளப்பெறத்தக்க வைப்புகளும் முற்பணங்களும் | **10** | 2,075,700.00 | 2,075,700.00 |
| | | 139,196,214.42 | 147,924,049.91 |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | |
| சொத்துகள், இயந்திர உபகரணங்கள் | **29** | 5,306,962.54 | 3,775,612.06 |
| இடர்காலக் கடன்கள் | **16** | 1,614,396.12 | 1,133,896.12 |
| **தொட்டுணர முடியாச் சொத்துக்கள்** | | | |
| புலமைச் சொத்துகளும் அபிவிருத்தி செயற்பாடும் | **18** | 952,115.62 | 287,634.25 |
| பணிக்கொடை முதலீடு | **1.14** | 4,928,197.56 | 4,567,866.73 |
| இடைநேர் பொறுப்புக்கான முதலீடு | **28** | 100,458,855.75 | 27,907,717.94 |
| | | 113,260,527.59 | 37,672,727.10 |
| **மொத்த சொத்துகள்** | | **252,456,742.01** | **185,596,777.01** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| கடனாளிகள் | **22** | 292,093.00 | 351,093.00 |
| திரண்ட மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | **14** | 63,979,982.98 | 6,464,009.39 |
| வருட லீவுக்கான ஏற்பாடு | | 770,503.60 | 754,024.93 |
| முற்பணப் பெறுகை | **24** | 932,500.00 | 932,500.00 |

| | | | |
|---|---|---|---|
| | | **65,975,079.58** | **8,501,627.32** |
| <u>**நடைமுறையல்லாப் பொறுப்புகள்**</u> | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | **23** | 6,629,105.00 | 5,108,510.00 |
| <u>**மொத்தப் பொறுப்புகள்**</u> | | **72,604,184.58** | **13,610,137.32** |
| **நிகர சொத்துகள்** | | **179,852,557.43** | **171,986,639.69** |
| **நிகர சொத்துகள்/ பங்குகள்** | | | |
| திரட்டிய நிதியம் | **12** | 169,634,336.15 | 161,768,418.41 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம்- அரச மானியங்கள் | **13** | 7,793,973.28 | 7,793,973.28 |
| - ஏனைய மானியங்கள் | **20** | 2,424,248.00 | 2,424,248.00 |
| **நிகர சொத்துகள்/ பங்குகள்** | | **179,852,557.43** | **171,986,639.69** |

5 தொடக்கம் 8 வரையிலான பக்கங்களில் இடம்பெற்றுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் 9 தொடக்கம் 14 வரையிலான குறிப்புக்கள் என்பன இந்நிதிக் கூற்றுகளில் முக்கிய பங்கை வகிக்கின்றன. சபையின் ஆளுநர் மன்றம் இந் நிதிக் கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்குப் பொறுப்பாக உள்ளது

……………………………………………
**எஸ்.எஸ்.குணசேகர**
**சபை உறுப்பினர்**
**திறைசேரியை பிரநிதித்துவப்படுத்தி**

……………………………………………
**சி.எச்.கமகே**
**சபை உறுப்பினர்**

………………………………
**பதில் பணிப்பாளர்/ பிர.நிறை.அதிகாரி**
**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான**
**தராதர அங்கீகார சபை**

…………………………………
**ஹர்ஷ சந்திரசிறி**
**உதவிப் பணிப்பாளர்(நிதி, நிர்வாகம்)**
**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான**
**தராதர அங்கீகார சபை**

## 6.3. 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**
**2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை 2024 | உண்மை 2023 | பாதீடு 2024 |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| **வருமானம்** | **1** | **171,947,201.89** | **166,499,857.61** | **147,788,600.00** |
| **மொத்த வருமானம்** | | **171,947,201.89** | **166,499,857.61** | **147,788,600.00** |
| **நிர்வாக, தாபனச் செலவுகள்** | | | | |
| தனியாள் வேதனாதிகள் | 2 | 36,768,161.66 | 28,721,403.03 | 38,061,797.60 |
| ஒப்பந்த சேவைகள் | **6** | 35,482,359.65 | 32,370,549.94 | 37,555,000.00 |
| வழங்கல்கள் | **4** | 871,956.77 | 997,934.93 | 1,000,000.00 |
| சந்தா மற்றும் உறுப்புரிமைக் கட்டணம் | **7** | 3,652,854.90 | 3,918,594.83 | 4,300,000.00 |
| பிரயாணச் செலவுகள் | **3** | 5,071,451.19 | 2,753,874.57 | 7,200,000.00 |
| பராமரிப்புச் செலவு | **5** | 4,418,754.94 | 5,656,107.32 | 4,600,000.00 |
| ஏனைய | **8** | 1,962,080.12 | 3,295,152.98 | 420,000.00 |
| நிதிச் செலவு மற்றும் ஏனைய | **9** | 13,088,712.00 | 3,410,733.99 | 75,000.00 |
| இடைநேர் பொறுப்பு ஏற்பாடு | | - | - | 0.00 |
| **மொத்தச் செலவு** | | **101,316,331.23** | **81,124,351.59** | **93,211,797.60** |
| **திறைசேரிக்குப் பங்களிப்பு** | | **(21,189,261.20)** | **0.00** | |
| **வருடத்திற்கான மிகை** | | **49,441,609.46** | **85,375,506.02** | **-** |

## 6.4. நிகர சொத்துகள்/ பங்குகளில் மாற்றம் பற்றிய கூற்று

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**
**2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான**
**நிகர சொத்துகள்/ பங்குகளில் மாற்றம் பற்றிய கூற்று**

| | ஒத்திவைக்கப் பட்ட வருமானம் ரூ. | ஏனைய மானியங்கள் ரூ. | திரட்டிய நிதி ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 1 இலுள்ளவாறு மீதி** | (9,908,592.21) | 1,814,600.00 | 138,170,828.30 | 85,594,361.01 |
| **மொத்தம்** | **(9,908,592.21)** | **1,814,600.00** | **138,170,828.30** | **85,594,361.01** |
| **2023 ஜனவரி 1 இலுள்ளவாறு மீதி** | - | - | - | - |
| சீராக்கல் செலவு | - | - | - | - |
| பெறத்தக்கவைகளை சீராக்கல் | | | | (169,000.00) |
| நிலை வைப்பு வட்டி சீராக்கல் | | | | (1,652.08) |
| நிலை வைப்பு வட்டி பெறத்தக்கவை சீராக்கல் (AQ சீராக்கல்) | | | | 1,006,762.93 |
| தொழில்நுட்பக் கருவி திரட்டிய. தேய்மான சீராக்கல் | | | | 180,661.81 |
| வருடத்திற்கான மிகை/ (குறை) | | | 85,375,506.02 | 85,375,506.02 |
| **2023 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி** | **(9,908,592.21)** | **1,814,600.00** | **223,546,334.32** | **171,986,639.69** |
| **2024 ஜனவரி 1 இலுள்ளவாறு மீதி** | (9,908,592.21) | 1,814,600.00 | 223,546,334.32 | 171,986,639.69 |
| திறைசேரிப் பங்களிப்பு சீராக்கல் | | | (22,336,181.33) | (22,336,181.33) |
| மிகைப் பெறுகைக்கான சீராக்கல் | | | (19,121,474.70) | (19,121,474.70) |
| கணக்கீட்டுத். தேய்மான,. சீராக்கல் | - | - | (10,369.36) | (10,369.36) |
| கட்டுப்பாட்டு யூனியன் நெதர்லாந்து வருமான சரிசெய்தல் | | | | - |
| பெறத்தக்கவைகளை சீராக்கல் | | | (243,666.33) | (243,666.33) |
| செலவிலிருந்து சொத்து மாற்ற சீராக்கல் | - | | 136,000.00 | 136,000.00 |
| வருடத்திற்கான மிகை/ (குறை) | | | 49,441,609.46 | 49,441,609.46 |
| **2024 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி** | **(9,908,592.21)** | **1,814,600.00** | **231,412,252.06** | **179,852,557.43** |

## இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

## 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சற் கூற்று

| விபரம் | 2024 | 2023 |
|---|---|---|
| | ரூ. | ரூ . |
| வருடத்திற்கான மிகை | 49,441,609.46 | 85,375,506.02 |
| **<u>சீராக்கல் ;</u>** | | |
| நிலையான சொத்து மீது தேய்மானம் | 1,899,147.69 | 1,931,445.53 |
| பணிக்கொடை ஏற்பாடு | 1,671,087.50 | 183,972.50 |
| தேய்மான,. சீராக்கல் | 10,369.36 | - |
| சொத்து மாற்றத்தின் நிகர நட்டத்திற்கான சீராக்கல்r | - | 45,582.01 |
| சொத்து விற்பனையிலிருந்து லாபம்/ நட்டம் | - | -1,354,854.90 |
| இடர்கடன் சீராக்கல் | - | - |
| தொழில்நுட்பக் கருவி திரட்டிய. தேய்மான சீராக்கல் | - | 180,661.81 |
| செலவு சீராக்கல் | -2,684,971.93 | - |
| தேய்மான சீராக்கல் | - | - |
| திரட்டிய. நிதிச் சீராக்கல் | -38,890,719.79 | -169,000.00 |
| சொத்து மாற்றத்தின் சீராக்கல்r | - | 1,005,110.85 |
| தேர்ச்சி சோதனையின் கடன் தீர்வு | 5,518.63 | 11,037.25 |
| NBT நிலுவையின் பதிவழிப்பு | | 32,557.83 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிகை** | **11,452,040.92** | **87,242,018.90** |
| **<u>செயற்பாட்டு மூலதன மாற்றங்கள்</u>** | | |
| பண்டிகை முற்பண அதிகரிப்பு/ (குறைப்பு) | - | 2,500.00 |
| பெற்ற முற்பண அதிகரிப்பு/ (குறைப்பு) | - | -13,726,331.82 |
| முற்கொடுப்பனவு அதிகரிப்பு/ (குறைப்பு) | -158,836.15 | 1,070,998.73 |
| பெறுகைகளில் அதிகரிப்பு/ (குறைப்பு) | -53,797,362.45 | 2,516,946.77 |
| கடனாளர்களில் அதிகரிப்பு/ (குறைப்பு) | -59,000.00 | -54,524.10 |
| உள்நாட்டுக் கொள்வனவு முற்பண அதிகரிப்பு/ (குறைப்பு) | 949,267.50 | -914,267.50 |
| வருடாந்த லீவு ஏற்பாட்டில் அதிகரிப்பு/ (குறைப்பு) | 16,478.67 | -96,700.33 |
| திரட்டிய செலவில் அதிகரிப்பு/ (குறைப்பு) | 57,515,973.59 | 3,990,197.52 |
| மீள் செலுத்துகை வைப்பில் அதிகரிப்பு/ (குறைப்பு) | - | 1,444,800.00 |
| இருப்பு மற்றும் ஏனைய விடயங்களில் அதிகரிப்பு/(குறைப்பு) | 68,668.85 | 35,185.50 |
| ஏனைய பெறுகைகளில் அதிகரிப்பு/ (குறைப்பு) | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல்** | **15,987,230.93** | **81,510,823.67** |
| **<u>முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்</u>** | | |
| நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல் | -4,110,867.53 | -1,965,682.75 |
| வருடத்தில் இடர் கடனை வழங்குதல் | -2,000,000.00 | -1,500,000.00 |
| சொத்துக்களை விற்பதன் மூலமான வருமானம் | - | 1,900,000.00 |
| வருடத்தில் இடர் கடன் அறவீடுகள் | 1,478,300.00 | 1,008,600.00 |
| பரிவர்த்தனை ஆதாயம்/நட்டம்- இடைநேர் பொறுப்புக்கான முதலீடு | 12,850,471.26 | 3,290,325.86 |

| | | |
|---|---|---|
| பணிக்கொடைக் கொடுப்பனவு | -150,492.50 | -1,063,262.50 |
| இடைநேர் பொறுப்புக்கான ஏற்பாடு | - | - |
| இடைநேர் பொறுப்புக்கான முதலீடு | -79,961,196.85 | |
| இடைநேர் பொறுப்பில் முதலீட்டிலிருந்தான வட்டி வருமானம் | -5,440,412.22 | -2,425,243.80 |
| பணிக்கொடை ஏற்பாட்டிலிருந்தான வட்டி | -360,330.83 | -827,589.21 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | **-77,694,528.67** | **-1,582,852.40** |
| <u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்**</u> | | |
| பெறப்பட்ட அரச மானியம் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | **-** | **-** |
| காசும் காசுக்கு ஈடானவற்றில் நிகர அதிகரிப்பு/ குறைப்பு | -61,707,297.74 | 79,927,971.27 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு ஈடானவையும் | 129,192,881.62 | 49,264,910.35 |
| **வருட முடிவில் காசும் காசுக்கு ஈடானவையும்** | **67,485,583.88** | **129,192,881.62** |

**இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை**
**நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்**

1.1 **முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்.**

**பொது**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB), 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் தேசிய தராதர அங்கீகார அதிகாரசபையாகும்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வணிகச் செயற்பாட்டு அமைவிடமும் இல. 44, பொருளாதார மத்திய நிலையம், கிரிமண்டல மாவத்த, நாரஹென்பிட்ட, இலங்கை எனும் முகவரியில் அமைந்துள்ளன.

1.2 தயாரிப்பின் அடிப்படையும் கணக்கீட்டுக் கொள்கைகளும்.

நிதிக் கூற்றுகள், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை இல. 3/2013 இற்கிணங்க, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS 1)

2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.2.2 கவனப் போக்கு

ஆளுநர் சபையானது, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் திறன் மதிப்பீடு ஒன்றினை கவனத்திற்குரிய போக்கு காரணமாக மேற்கொண்டதுடன், அவை சபையைக் கலைப்பதையோ அல்லது செயற்பாடுகளை முடிவுறுத்துவதையோ கருதவில்லை.

1.2.3 பங்களிப்புத் திட்டங்களின் வரையறைகள்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

பணியாளர்கள் இயைபுடைய நிலை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு தகுதியுடையவர்களாவர். இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையானது, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்காக முழுமொத்த ஊதியத்தில் முறையே 15% மற்றும் 3% பங்களிப்பை வழங்குகிறது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான அனைத்து பணவனுப்பல்களும் நிலுவைத் தொகையின்றி சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.3. சொத்துகளும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

ஐந்தொகைத் தினத்தன்று நடைமுறைச் சொத்துகளாக வகுத்தமைக்கப்பட்ட சொத்துகளானவை, வங்கி நிலுவைகளும் வழமையான வடவடிக்கைக் காலத்தில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள், இதில் எது குறுகிய காலமோ அதில் பணமாக மாற்றக் கூடியவை எனக் கருதப்படுபவையுமாகும். நடைமுறைச் சொத்துக்கள் அல்லாத பிற சொத்துக்கள், ஐந்தொகைத் தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு மேல் சபை வைத்திருக்க உத்தேசித்துள்ள நடைமுறையல்லாச் சொத்துகளாகும்.

அபிவிருத்திச் செயல்பாட்டின் கீழ் காட்டப்படும் தேர்ச்சிச் சோதனை நிகழ்ச்சித் திட்டச் செலவுகள், ஆண்டுத் தொடக்கத்தில் அதன் முன்னோக்கிச் செலுத்தப்பட்ட நிலுவையில் 50% மானவை தீர்க்கப்படுகிறது.

1.3.1 சொத்துகள், பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

சொத்துகள், பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆதியன, செலவு முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தகைய சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலச் செலவை பதிவழிப்பதற்காக, வருடாந்தம் பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் வழங்கப்படுகிறது.

| **சொத்துகள்** | **வீதம்** |
|---|---|
| மோட்டார் வாகனம் | 12.5% |
| தளபாடம் | 20% |
| அலுவலக உபகரணம், தொலைபேசி, பக்ஸ் இயந்திரம் | 20% |
| குளிரேற்றி மற்றும் குளிரூட்டி அலகுகள் | 12.5% |
| கணனி, அச்சியந்திரம், புரொஜெக்டர்,போட்டோபிரதி இயந்திரம் | 25% |
| கட்டடங்களும் அமைப்புகளும் | 33.33% |

சொத்து ஒன்றின் தேய்மானம் ஆனது, பயன்பாட்டிற்குக் கிடைக்கும்போது தொடங்கி, அதனை அகற்றுவதற்காக இனங் காணப்பட்ட ஆண்டின் இறுதியில் நிறுத்தப்படும். ஆண்டு இறுதியில் அகற்றுவதற்கு இனங் காணப்பட்ட எந்தச் சொத்தானாலும், அந்தப் பொருட்கள் அப்புள்ளி வரை தேய்மானம் செய்யப்படுகின்றன. ரூ. 5,000 க்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் நிலையான சொத்துகளாகவும் மற்றவை நுகர்வுப் பொருட்களாகவும் கருதப்படுகின்றன.

1.3.2 தொட்டுணர முடியாத சொத்துகள்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் இணையத்தளம், அதன் தகவல் தொழில்நுட்ப முறைக்கான மென்பொருள் என்பவற்றிற்கான நிதி, இலங்கைத் தர உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சுவீடன் அரச மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த மூலதனச் செலவை நடைமுறையல்லாச் சொத்தாக கருதப்பட்டு, சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் 2013 ஆம் ஆண்டில் இருந்து 5 வருடங்களினுள் பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1.4 பதிவேட்டுப் பொருட்கள்

நுகரத்தக்க களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட் பட்டி விடயங்கள் மாத்திரமே குறைந்த செலவில் அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன.

1.5 பெறத்தக்கவைகள்

பெறத்தக்கவைகள் பெறப்படுதற்கு மதிப்பிடப்பட்ட தொகையின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளன.

1.6. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

1.6.1 நடைமுறைப் பொறுப்புகள்

நடைமுறைப் பொறுப்புகள் என்பவை, கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியில் இருந்து ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுக்கு உரியனவாக கருதபடுவனவேயாகும். அறிந்து கொள்ளப்பட்ட சகல பொறுப்புகளும் நிதிக் கூற்றுகள் தயாரிக்கும் போது கணக்கிடப்பட்டுள்ளன.

1.7 வருமானமும் செலவினமும்

1.7.1 வருமான அங்கீகாரம்

பயிற்சித் திட்டங்கள் மற்றும் தராதர அங்கீகாரத் திட்டங்களில் இருந்தான வருமானம், திரட்டிய அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன. 2022 டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, கலண்டர் வருடத்தைக் கருத்திற் கொண்டு வருடாந்தக் கட்டணத்தை அறவிடத் தீர்மானித்துள்ளது ( ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரை).

1.7.2 திறைசேரி மானியங்கள்

திறைசேரி மானியங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக பெறப்படவில்லை.

1.7.3 செலவின அங்கீகாரம்

சபையை நிர்வகிப்பதிலும் சொத்துகள், இயந்திர, உபகரணங்களை வினைத்திறனான முறையில் பராமரிப்பதற்குமான சகல செலவுகளும், வருமானக் கூற்றுகளில் தரப்பட்டுள்ளன..

1.8 வரி விதிப்பு

வரி விதிக்கக்கூடிய இலாபம் காணப்படாததால், வருமான வரிக்கான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

1.9 ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தல் அல்லது சீராக்கல் மேற்கொள்ள வேண்டிய எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

1.10 ஒப்பீட்டுப் பெறுமானங்கள்

ஒப்பீட்டுப் பெறுமானங்கள் தேவைக்கேற்றவாறு, நடைமுறை வருட முன்வைப்பிற்கு ஏற்றவாறு மீள வகுத்தமைக்கப்பட்டுள்ளன.

1.11 காசுப் பாய்ச்சற் கூற்று

காசுப் பாய்ச்சற் கூற்று நேரடியற்ற வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

1.12 அந்நியச் செலாவணி உழைப்புகள்

